தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம் அரையணை.

# சேலம் - மேட்டூர் தண்ணீர் சப்ளை திட்டத்தின் வரலாறு.

## மாஜி வைஸ்-சேர்மன் விளக்கம்.

(1) சேலத்திற்கு மேட்டூரிலிருந்து குழாய் தண்ணீர் கொண்டு வரும் விஷயமாய் சென்ற நான்கு மாதங்களாக சென்னை சர்க்காருக்கும் சேலம் நகர சபையாருக்கும் நடந்துவந்த வாதங்களும், அவற்றின் முடிவும் பத்திரிகைகளின் வாயிலாகவும், மேடை பிரசங்கங்களின் மூலமாகவும் சுருக்கமாக சிற்சில விஷயங்கள் வெளிவந்தது போக, அவற்றின் முழு விவரங்கள் பொது ஜனங்களுக்கு ஆதார பூர்வமாய் தெரியாதாகையால் அந்த விவரங்களை சாத்தியப்பட்டவரையில் வெளியிடவே இந்த அறிக்கையை பிரசுரிக்க முன்வந்துள்ளேன்.

(2) சென்ற சுமார் 10 வருடங்களாக மேட்டூரிலிருந்து சேலத்திற்கு குடி தண்ணீர் கொண்டுவரும் விஷயமாய் சென்னை அரசாங்கத்தாரை அடுத்தடுத்து வேண்டிக்கொண்டுவந்தும் அப்பொழுதிருந்த இரட்டையாக்ஷியின் பயனாகவும், நிர்வாகமும், பணப்பொறுப்பும் மே. த. கவர்னர் வசம் இருந்துவந்ததின் காரணமாகவும் இதற்கு தக்க பரிகாரம் தேடிக்கொள்ள வழியின்றி தவித்துக்கொண்டிருந்த காலத்தில் அநேக இடுக்கண்களுக்கிடையில் அப்பொழுது பிரதம மந்திரியாகவிருந்த கனம் பொப்பிலி ராஜா அவர்களின் நன்முயற்சியின் பலனாக 1936-வது வருடம் ஜூன் மாதத்தில் இதற்கென்று ரூ. 24,03,480 (இருபத்து நான்கு லக்ஷத்து மூவாயிரத்து நானூற்று எண்பது ரூபாய்) சாங்க்ஷன் செய்யப்பட்டது. இதில் பாதித் தொகையை சென்னை மாகாண பொதுப்பண்டிலிருந்து கவர்ன்மெண்டார் கொடுத்துதவவேண்டியதென்றும், மீதி பாதித் தொகையை சேலம் நகரசபையார் கடனாக பெற்று கட்டவேண்டியதென்றும் அப்பொழுதே முடிவு செய்யப்பட்டது.

(3) இது சாங்க்ஷன் செய்யப்பட்ட பின் இது சம்மந்தமாய் நகர சபையார் கவர்ன்மெண்டாருடன் சில முக்கிய அம்சங்களைப்பற்றி கடிதப்போக்குவரத்து நடத்தி அவை ஒரு முடிவுக்கு வந்ததும் கவர்ன்மெண்டாரால் இன்னின்ன வேலைக்கு இன்னின்ன மாதிரி குழாய்களிருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட ஷெடியூலையும், ஸ்பெஸிபிகேஷனையும் அனுசரித்து மேட்டூரிலிருந்து நங்கவள்ளி வரையில் முதல் ஏழு மைல் தூரத்திற்கு மாத்திரம் கண்டிராக்டில் விடுவதற்கு டெண்டர்கள் தேவை

யென 1937-வது வருடம் நவம்பர் மாதம் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டன. இந்த விளம்பரத்தையொட்டி இம்மாதிரி வேலைகளில் அனுபவமும் கியாதியும் பெற்ற 16 இஞ்சினியரிங் கம்பெனிகளிலிருந்து டெண்டர்கள் வரலாயின.

(4) இதன் மத்தியில் சென்னை கவர்ன்மெண்டார் சீப் இஞ்சினியரின் சிபார்சையும், அபிப்பிராயத்தையும் ஒட்டி தண்ணீர் வேகம் 400-அடியிலிருந்து அதற்கு மேற்பட்டுள்ள பாகங்களிலெல்லாம் "பிடுமென்" என்கிற ஒரு வஸ்துவால் பூசப்பட்ட அல்லது "ஸென்டிரிபியூகல் பிராசெஸ்" என்று சொல்லப்படும் ஒரு முறைப்படி சிமெண்ட் கவரிங் கொடுக்கப்பட்ட ஸ்டீல் பைப்புகளை (உருக்கு குழாய்களை) உபயோகிக்கவேண்டுமென்றும், தண்ணீர் வேகம் 400-அடிக்கு குறைந்த பாகங்களிலெல்லாம் மேலே விவரித்துள்ள சிமெண்ட் குழாய்களையோ அல்லது "கேஸ்ட் ஐயர்ன்" வார்ப்பட இரும்பு குழாய்களையோ உபயோகிக்க வேண்டுமென்றும் 7-7-1937 தேதிய நெ.1580 கவர்ன்மெண்ட் உத்தரவு பிறப்பித்து இதை 4—12—1937 தேதியில் காயமும் செய்திருக்கிறார்கள். இந்த உத்திரவில் குறிக்கப்பட்டுள்ள குழாய்கள் பிரிட்டிஷ் ஸ்பெஸிபிகேஷனை ஆதாரமாகக்கொண்டே நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(5) இது இப்படியிருக்க மேற்கண்ட 16 டெண்டர்களையும் சேலம் நகர சபையார் 22—11—37, 25—11—37 தேதிகளில் கூடிய மீட்டிங்குகளில் திறந்து, அவைகளை புள்ளிகள்வாராக ஸ்டேட்மெண்ட் போட்டு, கவர்ன்மெண்ட் உத்தரவு பிரகாரம் சானிடரி இஞ்சினியருக்கு அனுப்பி வைத்தார்கள். கவர்ன்மெண்டாரும் 4—12—37ல் சானிடரி இஞ்சினியருக்கு எழுதி அவருடைய அபிப்பிராயத்தை கேட்கலானார்கள். அவர் 22—12—37 தேதியில் கவர்ன்மெண்டுக்கு அனுப்பிய ரிபோர்ட்டில் எல்லா டெண்டர்களையும் சீர்தூக்கிப்பார்த்து, ஒவ்வொன்றிலுமுள்ள அம்சங்களைப்பற்றி பாதக சாதகங்களை விளக்கிக்காட்டி, இந்த 7 மைல் கண்டிராக்டில் (1) குழாய்கள் சப்ளை செய்வது (2) பூமியில் வெட்டி குழாய்களை போடுவது (3) குழாய்களுக்கு வால்வ்கள், பெண்டுகள் சப்ளை செய்து அவைகளை ஜாயிண்ட் செய்வது ஆகிய மூன்று வேலைகளுக்கும் சேர்த்து மூன்றே கம்பெனிகள்தான் கவர்ன்மெண்ட் ஸ்பெஸிபிகேஷன்படி டெண்டர்கள் கொடுத்திருக்கின்றனவென்றும், அவற்றில் (1) இந்தியன் ஹியூம் கம்பெனி ரூ. 4,34,699-க்கும், (2) ஹாரிசன் அன்ட் கிராஸ்பீல்ட் ரூ. 7,11,847-க்கும், (3) கேனன் டங்கர்லி ரூ. 8,51,716-க்கும் டெண்டர் செய்திருப்பதால் அவை மூன்றில் இந்தியன் ஹியூம் பைப் கம்பெனி டெண்டரே, சகாயம், சிக்கனம், வேலைக்கு பொறுத்தம், நீடித்து உழைக்கும் தன்மை, குறித்த வாய்தாவுக்குள் முடிக்கும் அம்சம் இவைகளெல்லாம் பொருந்தியிருக்கிறமையால் இதுவே முனிசிபல் சபையாருக்கு சிபார்சு செய்ய மெத்த சிறந்தது என தமது அபிப்பிராயத்தை தெரிவித்தார். அதே கடிதத்தில் (மைசூர்) பத்ராவதி கேஸ்ட் ஐயர்ன் பைப்புகளைப்பற்றி, 400 அடி வேகத்திற்கு உபயோகப்படும் டி. கிளாஸ் பைப்பு

களையே 650 அடி வேகத்திற்கும் சப்ளை செய்வதாக அவர்கள் டெண்டர் செய்திருப்பதாலும், இது ஸ்டாண்டர்ட் பைப்புவேலைகளின் அனுஷ்டானத்திற்கே மாறுபட்டிருப்பதாலும், இதைப்பற்றி யோசிக்கவே சாத்தியமில்லையென்றும் தெரிவித்திருந்தார்.

(6) இந்த கடிதம் 22—12—37-ல் கவர்ன்மெண்டாருக்குக் கிடைத்ததும், சென்ற 10 வருடங்களாக எல்லோர் கவனத்திலிருந்து வரும் இவ்வளவுபெரிய ஒரு கண்டிராக்டில் எவ்வளவோ விஷயங்களை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்க, எட்டு நாட்களுக்குள், அதாவது 30-12-37-ல் கமிஷனருக்கு ஒரு தந்தி கொடுத்து சேலம் தண்ணீர் சப்ளை விஷயமாக மைசூர் பத்ராவதி டெண்டரை ஒத்துக்கொள்ளவேண்டியதென்றும், இதை மேற்படி கம்பெனியாருக்கு 31-12-37க்குள் தெரிவித்துவிடவேண்டியதென்றும், இது பின்னால் காயம் செய்யக்கூடியதென்றும் தந்தி உத்தரவு அனுப்பிவிட்டார்கள். பிறகு இதே உத்தரவை அனுசரித்து எழுத்து மூலியமாய் ஷை 30-12-37 தேதியிட்டு ஒரு உத்தரவு அனுப்பி மைசூர் பத்ராவதி டெண்டரை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் கூடிய சீக்கிரத்தில் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய ஏற்பாடுகள் செய்துக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இது வந்த மூன்று தினங்களுக்குள் அதாவது 4—1—38-ல் மறுபடியும் ஒரு தந்தி உத்தரவு அனுப்பினார்கள். இதில் 30—12—37 தேதிய உத்தரவு பிரகாரம் மைசூர் பத்ராவதி ஸ்டீல் ஒர்க்ஸ்காரருக்கு இன்னம் ஆர்டர் கொடாமலிருந்தால் முதல் 10800 அடி தூரத்தை ஒப்பந்தத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று தெரிவித்தார்கள்.

(7) இப்படி கவர்ன்மெண்டார் தடுமாறிக்கொண்டிருந்ததைப்பார்த்து 4—1—38-ல் இரண்டாவது தந்தி வந்ததும், முனிசிபல் சேர்மன் கவர்ன்மெண்டாருக்கு நீண்டதோர் கடிதமெழுதி, இந்த வேலைக்கென்று வந்துள்ள எல்லா டெண்டர்களின் புள்ளிகளையும், அவைகளிலுள்ள பாதகங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டி, இந்தியன் ஹியூம் பைப் கம்பெனியாரின் டெண்டர் எவ்வித குறைகளுக்கும் இடமின்றி ரூபாய் ஒரு லக்ஷத்திற்குமேல் சகாயமாயிருப்பதுடன் கவர்ன்மெண்ட் ஸ்பெஸிபிகேஷனை அனுசரித்து எல்லா வேலைகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி குறித்த வாய்தாவுக்குள் முடித்துக்கொடுப்பதிலும் விசேஷமாயிருப்பதால் இதுவே மெத்த அனுகூலமானதென விளக்கிக் காட்டினார். இந்த கடிதம் போய் சேர்ந்ததும் கவர்ன்மெண்டார் 8—1—38-ல் மறுபடியும் ஒரு தந்தி கொடுத்து முடிவான உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் இதற்கு முன் 30—12—37-ல் கொடுத்த உத்தரவின்பேரில் நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ளாது நிறுத்திவைக்கும்படி தெரிவித்தார்கள். இதிலிருந்து விஷயம் இப்பொழுதுதான் கவர்ன்மெண்டாரின் புத்தியில் பட்டிருக்கிறதுபோலிருக்கிறதென்று எண்ணினோம்.

(8) ஆகவே இந்த தந்தி கிடைத்ததும் 10—1—38-ல் நகர சபையாரின் ஸ்பெஷல் மீட்டிங்கு ஒன்று கூட்டி ஆதியிலிருந்து அந்தம் வரை

யில் இந்த டெண்டர்கள் விஷயமாய் நடந்துவந்த எல்லா விருத்தாந்தங்களும் சபையாருக்கு விளக்கிக்காட்டப்பட்டன. அதின்பேரில் ஸ்ரீமான் S. C. வெங்கடப்ப செட்டியார் B. A., B. L., M.L.A., அடியில்கண்ட தீர்மானத்தை பிரேரேபித்து, வைஸ் சேர்மென் ஸ்ரீ G. ராமச்சந்திரநாயுடு அதை ஆமோதிக்க அது ஏகமனதாக நிறைவேறியது:—

"29—7—37 தேதியில் நெ.2830 கவர்ன்மெண்ட் ஆர்டரில் டெண்டர்களை கவர்ன்மெண்டாரின் சிபார்சுகளை அனுசரித்தோ, அல்லாமலோ பைசல் செய்யும் பொறுப்பு நகர சபையாருடையதேயென்று வியக்தமாய் குறிக்கப்பட்டிருப்பதால், கவர்ன்மெண்டார் 30—12—37-ல் மைசூர் பத்ராவதி டெண்டரை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று பிறப்பித்த உத்தரவானது மேற்குறித்த நெ. 2380 ஆர்டர்படி சரியல்லவென்று இந்த சபை அபிப்பிராயப்படுகிறது. மேலும் கவர்ன்மெண்டார் 8—1—38ல் தந்தியில் பிறப்பித்த உத்தரவில் முடிவான உத்திரவு பிறப்பிக்கப்படும் வரையில் ஏற்கனவே மைசூர் பத்ராவதி டெண்டரை ஏற்றுக்கொள்ளும்படி கொடுத்த கட்டளையை அமுலுக்கு கொண்டுவராது நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதை அனுசரித்து, கவர்ன்மெண்டாராக இந்த டெண்டர்களின்பேரில் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் அவைகளை பைசல் செய்யும் விஷயத்தை மேலே சுட்டிக்காட்டிய கவர்ன்மெண்ட் ஆர்டர் பிரகாரம், நகர சபையாருக்கே விட்டுவிடும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்."

(9) இந்த தீர்மானம் கவர்ன்மெண்டாருக்கு போய் சேர்ந்த சில தினங்களுக்குள் கனம் சுகாதார மந்திரியே 6—2—38-ல் சேலத்திற்கு விஜயம் செய்யப்போவதாக தெரியவந்தமையால் அவர் இந்த விவகாரத்தை நகர சபையாருடன் நேரில் கலந்துபேசி ஒரு முடிவுக்குவர எண்ணியிருக்கிறார் என்று நினைத்திருந்தோம். ஆனால் அவர் சேலம் வருவதற்கு முந்திய தினம் 4-2-38 தேதியிட்ட நெ. 469 காங்கரஸ் கவர்மெண்ட் உத்தரவு இது விஷயமாய் எல்லோரும் ஏமாற்றமடையும்படி வந்து சேர்ந்தது. அந்த உத்திரவில் கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை சீப் இஞ்சினியருடன் கலநது புனராலோசனை செய்ததாகவும், பின்னால் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளப்பட்ட தகவல்களைக்கொண்டு பார்த்ததில் முதல் 10,800 அடி தூரத்திற்கு தண்ணீர் வேகம் அதிகமாயிருப்பதால் அந்த பாகத்திற்கு அமெரிகன் ஸ்பெஸிபிகேஷன்படி அதிக தளமுள்ள ஜி. இ. கிளாஸ் பைப்புகள் உபயோகப்படுத்தவேண்டுமென்றும், இந்த தளமான, மொத்தமான பைப்புகளுக்கு அதிகப்படியாக உபயோகிக்கப்படவேண்டிய இரும்பை மைசூர் பத்ராவதி ஸ்டீல் ஒர்க்ஸ்காரர் சார்ஜில்லாமல் சும்மா கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் ஆகவே மேற்கண்ட ஒரு மாறுதலுக்குட்படுத்தி தங்களின் 30—12—37 தேதிய உத்திரவே ஸ்திரமென்றும், நகர சபையார் பத்ராவதியாருடன் வேண்டிய கண்டிராக்ட் ஒப்பந்தம் செய்துக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(10) இந்த உத்திரவு கிடைத்த மறுதினமே அதாவது 6—2—38 தேதி கனம் சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் சேலம் வந்து சேர்ந்தார். விஷயத்தை அவர் வருவதற்கு முந்தியே முடித்து அனுப்பிவிட்டு வந்து விட்டமையால் அவர் இனி நேரில் பேசப்போவது ஒன்றுமே இராதென்பது ஸ்பஷ்டமாயிருந்தது. எனினும் அவருடன் நகர சபையார் கலந்து பேசிப்பார்த்தால் ஏதாவது விசேஷ காரணமிருந்தால் தெரிந்துக் கொள்ளக்கூடுமென்றெண்ணி அன்று மாலை முனிசிபல் ஆபீசில் அவருடன் நேரில் கலந்து அந்தரங்கமாகப் பேசினார்கள். அவர் ஆரம்பத்திலேயே தாம் சொல்லப்போகும் விஷயங்களை பத்திரிகைகளிலோ அல்லது மற்ற விதமாகவோ பகிரங்கப்படுத்தக்கூடாது என்று ஒரு 144-போட்டுவிட்டு பேச ஆரம்பித்தார். அதைப்பற்றிய அநேக விவரங்கள் அவரையும், காங்கரஸ் கவர்மெண்டையும் ஆதரிக்கும் முகத்தான் சில பத்திரிகைகள் சென்னையிலிருந்தே மறைமுகமாய் வெளியிட்டுவிட்டனவெனினும் நான் அவற்றை பகிரங்கப்படுத்த பிரியப்படவில்லை. ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, அவர் சொன்ன விஷயங்கள் யாவும் சற்று யோசித்து பார்க்கும் சக்தியுள்ள யாரும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாயிருந்தமையால் அவற்றை மிகப்படுத்திக்கொள்ளவேண்டியதில்லை யென்பதே. எனவே, நேரில் கலந்து பேசி உண்மையையும், பிடிவாதத்திற்கு ஆதாரமிருந்தால் அதையும் தெரிந்துகொள்ளலாமென்று எதிர்பார்த்தது பகற்கனவாய் முடிந்தது.

(11) இந்த உத்திரவு கிடைத்ததும் 9—2—38-ல் இதற்கென்று நகர சபையாரின் ஸ்பெஷல் மீட்டிங்கு ஒன்று கூட்டி சபையாரின் முன் இது ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்டது. அன்று மாலை 5 மணியிலிருந்து இரவு 8 மணி வரையிலும் இந்த விஷயம் சபையாரால் மெத்த ஆர்வத்துடன் சர்ச்சை செய்யப்பட்டு அடியில்கண்ட தீர்மானத்தை வைஸ் சேர்மென் ஸ்ரீ G. ராமச்சந்திர நாயுடு பிரேரேபித்து ஸ்ரீ S. ராஜாகண்ணு செட்டியார், ஸ்ரீ P. K. பெருமாள் செட்டியார் இவர்கள் முறையே ஆமோதித்து ஆதரிக்க இது ஏகமனதாக நிறைவேறியது.

## தீர்மானத்தின் சாராம்சம்.

"சேலம் மேட்டூர் குடிதண்ணீர் சப்ளை ஸ்கீமுக்காக மைசூர் பத்ராவதி ஸ்டீல் ஒர்க்ஸ்காரர் (1) குழாய்கள்மாத்திரம் சப்ளை செய்கிறார்களேயொழிய, மற்றபடி (a) குழாய்கள் போடுவது, (b) குழாய்களை வால்வ்கள், பெண்ட்ஸ்கள் கொண்டு ஜாயின்ட் செய்வது இல்லை (2) இவர்கள் இந்த மூன்று வேலைகளையும் ஒருமிக்க செய்ய டெண்டர் கொடாததால் பின்னால் பழுது ஏற்பட்டால் அந்த பொறுப்பை யார்பேரில் சுமத்துவது என்பது நிர்ணயிக்க முடியாது (3) இக்காரணத்தைப்பற்றி இவர்கள் 25-வருடங்களுக்கு காரண்டி கொடுத்தாலும் அது அர்த்தமற்றதாயிருக்கின்றது. (4) இவர்களுடைய ரேட்கள் இந்தியன் ஹியூம் கம்பெனி ரேட்டைவிட ஒரு லக்ஷம் ரூபாய்க்குமேல் அதிகமாயிருக்கிறது. (5) இவர்

களுடைய குழாய்கள் கேஸ்ட் ஐயர்ன் குழாய்களாகையால் இவைகள் நாள்பட துருப்பிடித்து அடுத்த 20, 25 வருஷங்களுக்குள் குழாய்களின் உள் சுற்றளவு 100-க்கு 40-வீதம் குறைந்துவிடும். (6) அப்படி உள் சுற்றளவு குறைந்துபோவதால் தண்ணீர் சப்ளையாகவேண்டிய அளவு (discharging capacity) குறைந்துகொண்டேபோய்விடும். (7) அப்படி இது குறைந்துபோனால் மேலேயிருந்து தண்ணீர் பம்பிங் செய்யவேண்டியதற்காக ஏற்படும் செலவு வருடா வருடம் நிரந்தரமாக ஆயிரக் கணக்கில் அதிகப்பட்டுவிடும். (8) இப்படி அனுவசியமாய் அதிகமாய் ஏற்படும் செலவை வருடா வருடம் சேலம் மகா ஜனங்களே கொடுக்கவேண்டி நேரிடும்.''

"இவை இப்படியிருக்க இந்தியன் ஹியூம் பைப் கம்பெனியின் சிமெண்ட் குழாய்களோ (1) சென்னை சானிடரி இஞ்சினியரால் எல்லா வகையிலும் திடமானது, மேலானது, சகாயமானது என்று ஆராய்ந்து சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (2) இதனுடைய சிலாக்கியத்தைப்பற்றி சென்னை சீப் இஞ்சினியராலோ அல்லது வேறு எந்த உயர்தர கவர்ன் மெண்ட் இஞ்சினியரிங் உத்தியோகஸ்தராலோ குறைகூறப்படாதது. (3) நாளது வரையில் சென்னை கவர்ன்மெண்டாரால் தண்ணீர் குழாய் சம்மந்தமான எல்லா வேலைகளுக்கும் இவை சிலாக்கியமானவையென்று அடுத்தடுத்து சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (4) கேஸ்ட் ஐயர்ன் குழாய்கள் போடுவதால் ஏற்படக்கூடிய கோளாறுகள் எதுவுமே ஏற்பட இடமில்லாதது. (5) அந்த கோளாறுகளுக்கு இடமில்லாமையால் வருடா வருடம் ஆயிரக் கணக்கில் சேலம் மகா ஜனங்களுக்கு நிரந்தரமான பண மிச்சமும், சகாயமும் ஏற்பட வசதியுள்ளது. (6) குழாய்கள் சப்ளை செய்வது (b) குழாய்கள் போடுவது (c) வால்வ்ஸ், பெண்ட்ஸ்களைக்கொண்டு குழாய்களை ஜாயிண்ட் செய்வது ஆகிய இந்த மூன்று வேலைகளையும் ஒருங்கே எடுத்துக்கொண்டு குறித்த வாய்தாவுக்குள் முடித்துக்கொடுக்கும் உத்தரவாதத்துடன் டெண்டர் கொடுத்துள்ளது. (7) ரேட்டில் மைசூர் பத்ராவதி ஸ்டீல் ஒர்க்ஸைவிட ஒரு லக்ஷம் ரூபாயிக்குமேல் சகாயமாயுள்ளது.''

"ஆகவே இந்த சாதக பாதகங்களை கவனித்து மைசூர் பத்திராவதி டெண்டரை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று போட்ட உத்தரவை கவர்ன் மெண்டார் புனராலோசனை செய்து அதை விட்டுவிட்டு, எல்லா விதத்திலும் சகாயமாயுள்ள ஹியூம் பைப் கம்பெனி டெண்டரையே ஏற்றுக் கொள்ள நகரசபையாருக்கு அனுமதி அளிக்கும்படி காங்கரஸ் கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், அப்படியின்றி மைசூர் பத்திராவதியாருடைய டெண்டரையே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கவர்ன் மெண்டார் இதற்குப் பின்னும் அபிப்பிராயப்பட்டால் ஹியூம் கம்பெனியாரைப்போல எல்லா வேலைகளையும் ரூ. 4,34,699-க்கே அவர்கள் ஏற்றுக் கொண்டு, குறித்துள்ள 10-மாத வாய்தாவுக்குள் வேலையை முடித்துக் கொடுத்து, டிஸ்சார்ஜிங் கெபாசிடியின் காரண்டி உள்பட 25-வருட கார

ண்டி அவர்கள் கொடுக்கக்கூடுமானல் அவர்களுக்கே (மைசூர்-பத்ராவதி யாருக்கே) இந்த கண்டிராக்டை கொடுப்பதில் நகர சபையாருக்கு எவ்வித ஆக்ஷேபணேயுமில்லேயென தெரிவித்துக்கொள்ளப்பட்டது.''

இந்த தீர்மானத்திற்குப்பின் கேஸ்ட் ஐயர்ன் குழாய்களை உபயோகிப்பதாயிருந்தாலும் அதிலும் ஒரு லக்ஷம் ரூபாயிக்குமேல் மிச்சப்படுத்தலாம் என்று ஹேரிசன் அண்டு கிராஸ்பீல்ட் கம்பெனியார் எழுதியிருந்த கடிதத்தின் காபியும் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது.

(12) மேற்கண்ட தீர்மானத்தில் எல்லா விவரங்களேயும் வெகு தெளிவாய் எடுத்துக்காட்டியும், கவர்ன்மெண்டாருக்கு இவ்வளவு சொல்லிய பின்னும் மைசூர்-பத்திராவதி கம்பெனியாருக்கே கொடுக்கவேண்டுமென்கிற பிரியமிருந்தால் அதற்கு வேண்டிய பந்தோபஸ்து தேடிக்கொண்டு அப்படியே செய்யலாமென்றும் தெரிவித்திருந்தமையால் காங்கரஸ் கவர்ன்மெண்டாரிடமிருந்து நியாயமான பதில் வருமென எதிர்பார்த்தோம். இல்லே. அங்கே நியாயத்திற்கு இடமில்லேயாகையால் அம்மாதிரி பதில் கிடைக்கவில்லே.

ஒவ்வொரு தடவையும் தந்திமேல் தந்தி பறந்துக்கொண்டிருந்தது போய் ஷ தீர்மானம் கிடைத்த 15-நாட்களுக்குப்பின் அதாவது 2-3-38 தேதியில் அடியில்கண்ட நெ: 842 உத்தரவை இந்த காங்கிரஸ் கவர்ன்மெண்டார் அனுப்பிவைத்தார்கள்.

அதில் விஷயத்தைக் குறைத்துக்கூறி, "நகர சபையார் தீர்மானத்தில் ஹியூம் பைப் கம்பெனி குழாய்களே எல்லா விதத்திலும் சிலாக்கியமானதென்றும், விலேயிலும் மெத்த குறைந்ததென்றும் ஆகவே அந்த கம்பெனியின் டெண்டரை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். (தீர்மானத்தின் பொருள் அதுமாத்திரமல்லவென்பது மேலே வாசித்துப்பார்க்கத் தெரியும்) கவர்ன்மெண்டார் நகர சபையாரால் எடுத்துக்காட்டப்பட்ட எல்லா அம்சங்களேயும் நிபுணர்களின் யோசனேப்படி ஆர தீர சிந்தித்தே ஏற்கனவே முடிவு செய்தவண்ணம் மைசூர்-பத்ராவதி கேஸ்ட் ஐயர்ன் குழாய்களே மெத்த சிலாக்கியமானவை என்கிற முடிவுக்கு வந்திருக்கிருர்கள். ஆகவே, இந்த நிலேமையில் கவர்ன்மெண்டார் தங்களது முந்திய உத்தரவுகளே புனராலோசனே செய்ய சாத்தியமில்லேயென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிருர்கள்.'' (இதெல்லாம் வாதமா அல்லது பிடிவாதமா என்பதை மகா ஜனங்களே ஊகித்துப்பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறேன்.)

(13) இந்த உத்தரவை வெளியிடுவதற்கு முன் கனம் பிரசுர மந்திரியைக் கொண்டு இந்த உத்தரவைத் தழுவி பிரசுரம் ஒன்றை எல்லா பத்திரிகைகளிலும் வெளியிட்டார்கள். இந்த பிரசுரத்தைப் பார்த்தபின் ஹியூம் பைப் கம்பெனியார் ஒரு தந்தி கொடுத்து தாங்கள் 30 வருஷத்

திற்கு காரண்டிக் கொடுக்க தயாரென்றும், மேட்ரோர் தண்ணீர் சிமெண்டு குழாய்களுக்கு மெத்த தகுதியானதென பம்பாய் ரசாயண சாஸ்திரி Mr. மிட்செல் என்பவரைக் கொண்டு ஆதாரபூர்வமாய் ருசுசெய்யப் பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்கள். இதுவும் கவர்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது.

அதே தேதியில் இந்த கம்பெனியார் கவர்ன்மெண்டுக்கு நேராக ஒரு கடிதம் எழுதி, தங்களுக்கு இந்தகண்டிராக்டை கொடுக்கக் கூடுமானால் அதிலிருந்து ஏற்படக்கூடிய சிலாக்கியங்களை மறுபடியும் வற்புறுத்திக் காட்டி, முடிவை புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொண்டு, இன்னமொருமுக்கிய விஷயத்தையும் அவர்களது கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். அதாவதென்னவெனில், இந்த கண்டிராக்ட் இவர்களுக்கு கிடைக்கக்கூடுமானால் இந்த ஆதாரத்தைக்கொண்டு ஒரு ஹியூம் ஸ்டீல் பிளாண்டையே இந்த மாகாணத்தில் ஸ்தாபிக்க உத்தேசமென்றும், அப்படியானால் குழாய்கள் இங்கேயே தயாராகக்கூடுமாகையால் இப்பொழுது கொடுத்திருக்கும் குறைந்த சார்ஜைவிட அடுத்த வருடங்களில் இன்னும் அதிகமாய் சார்ஜ் குறைந்துவிடுமென்றும், இதினால் தண்ணீர் சப்ளை வேலைகளுக்கு கவர்ன்மெண்டுக்கும், மகா ஜனங்களுக்கும் மெத்த சகாயம் ஏற்படுமென்றும் எடுத்துக்காட்டினார்கள்,

(14) கவர்ன்மெண்டார் எதற்கும் செவி சாய்க்காது ஒரே பிடிவாதமாய் 12-வது பாராவில் கண்ட உத்தரவே முடிவான உத்தரவு என்று நின்றுவிட்டமையால் இதைப்பற்றி மேற்கொண்டு என்ன செய்வது என்பதை யோசிப்பதற்காக 9—3—38 தேதி மாலை நகர சபையின் ஸ்பெஷல் மீட்டிங் ஒன்று கூட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த உத்தரவின் அதிருப்தியின் காரணமாக இதுவரையில் கூடவேண்டிய சாதாரண மீட்டிங்குக்கும், பட்ஜெட் ஸ்பெஷல் மீட்டிங்குக்கும் ஒருமுறைக்கு இரண்டு மூன்று முறை மீட்டிங்கு கூட்டியும் கோரமில்லாமல் எந்த மீட்டிங்கும் நடைபெறுமலே போய்விட்டது. இதற்கு மத்தியில் ஷி கவர்ன்மெண்ட் உத்தரவு கிடைத்த தினமே முனிசிபல் சேர்மென் டாக்டர் B. A. ராஜரத்தினம், கவர்ன்மெண்டார் ஒரு பக்ஷமாய் மைசூர்-பத்ராவதியாருக்கு சந்தர்ப்பம் அளித்ததுபோல் மற்ற கம்பெனிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்காமல், தங்களுக்குள்ள விசேஷ அதிகாரத்தை துஷ்பிரயோகம்செய்த டெண்டரை பைசல் செய்து விட்டமையால், தம்முடைய ஆக்ஷேபணையையும், அதிருப்தியையும் ராஜிநாமா மூலமன்றி வேறு விதமாய் தெரிவித்துக் கொள்ள மார்க்கமில்லையென்று சொல்லி, சேர்மென்பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

9—3—38 மாலை ஸ்பெஷல் மீட்டிங் கூடியதும், வைஸ் சேர்மென் ஸ்ரீ ஜி. ராமச்சந்திர நாயுடு தலைமை வகித்து, சபையார் சேர்மென் ராஜிநாமாவை அங்கீரரித்ததும், அடியில்கண்ட தீர்மானத்தை ஸ்ரீ. பி.கே. பெருமாள் செட்டியார் பிரேரேபித்து, ஸ்ரீ. சி. தாண்டராய உடையார் ஆமோதித்து 11 பேர்சாதகமாகவும் 7 பேர் பாதகமாகவும் ஓட்செய்ய தீர்மானம் நிறைவேறியது:—

தீர்மானம்:- "மேட்டூர் தண்ணீர் சப்ளைபம்பிங் மெயினுக்காக கவர்ன் மெண்ட் ஸ்பெஸிகேஷனை சரியாக ஒத்திருப்பதும், மெத்த சிறந்ததும், அதிககுறைந்த ரேட்டுள்ளது மானடெண்டரை, இதுவரையில் கவர்ன் மெண்டாரால் அனுப்பப்பட்டு நகரசபையாரின் முன்னிருக்கும் தக்கபொ றுத்தமான காரணங்களையும், புள்ளிகளையும் ஆதாரமாகக்காட்டி ஆதரித்த வேண்டுகோளை பிடிவாதமாய் புறக்கணித்து விட்டு, கவுன்சிலார் தீர்க்கா லோசனையின்பேரில் ஏகமனதாக அடுத்தடுத்து எடுத்துக் காட்டிய அபி ப்ராயங்களை மனதார மதிக்காது உதரித் தள்ளிவிட்ட இந்த கவர்ன்மெ ண்ட் உத்தரவை அழுத்தமாக கண்டிப்பதுடன், இந்த உத்தரவு பொது வாக சேலம் மகாஜனங்களுக்கும், குறிப்பாக ஏழைவரி கொடுப்போருக்கும் பாதகத்தை விளைவிக்கக்கூடிய தென கவுன்சிலார் நிக்ஷயமாக நம்புகிற படியால் இதைநிறை வேற்ற முடியாதென வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்"

(15) தீர்மானம் நிறைவேறியதும், கவுன்ஸிலர்கள் ஸ்ரீ. பி. கே. பெ ருமாள் செட்டியார், ஸ்ரீ. வி. ஆர். பழனிசாமி செட்டியார், ஸ்ரீ. கே. ஓ. ராமசாமிபிள்ளை, ஸ்ரீ. எஸ். கோவிந்தசாமிபிள்ளை, ஸ்ரீ. உசேனிவரதய்ய, ஸ்ரீ. ஆர். நரசிம்ம செட்டியார், ஸ்ரீ. எஸ். ராஜாகண்ணு செட்டியார், ஸ்ரீ. ஸி. தாண்டராய உடையார், டாக்டர் பி. எ. ராஜரத்தினம், ஜனுப். அப்து ல் ரஷீத்சாயபு, ஆகிய இவர்கள் கவர்ன்மெண்டார் இந்த டெண்டர் விஷ யமாய் ஒரே பிடிவாதமாயும், நியாய விரோதமாயும், நடந்துகொண்டதை கண்டித்து, நகரசபையின் கௌரவத்தையும் சேலம் மகாஜனங்களின் நன் மையையும் கருதி தங்கள் கவுன்சிலர் பதவிகளை ராஜிநாமா செய்வ தொன்றே கண்யமான முறையென தெரிவித்து ராஜிநாமா செய்து விட்டார்கள்.

இந்த ராஜிநாமாக்களை ஏற்று, வைஸ்-சேர்மன் ஸ்ரீ. ஜி. ராமச்சந்திர நாயுடு இந்த டெண்டர்கள் சம்மந்தமாய் காங்கரஸ் கவர்ன்மெண்டார் அதிக்கிரமமாக நடந்து வந்திருப்பதை ஆதியோடந்தமாய் எடுத்துக்காட்டி தம்மாலியன்ற அனுகூலத்தை செய்துவைக்கவேண்டுமென்று ஆர்வங் கொண்டு ஆதாரபூர்வமாய், திரிகரண சுத்தியாய், தாம் ஓயாது வாதாடி யும், பாடுபட்டும் கடைசியாய் அவர்களின் முடிவு சேலம் மகாஜனங்களின் நன்மைக்கு விரோதமென்பதை மனதாரத் தெரிந்தும் கவுன்ஸிலில் ஸ்தா னம் வகித்து அந்த அதிக்கிரமத்திற்கு பாத்தியப்படுவதைவிட தமது வைஸ் சேர்மென் பதவியையும், கவுன்சிலர் பதவியையும் ராஜிநாமா செ ய்து விலகிக்கொள்ளுவதொன்றுதான் கௌரவமானதென்று சொல்லி ராஜிநாமா செய்துவிட்டார்.

(16) இப்படி செய்ததைவிட இன்னும் கவுன்சிலுக்குள்ளிருந்தே வாதாடியிருக்கக்கூடாதா என்று சிலர் நினைக்கலாம். இல்லை, அதுகுட்டிச் சுவரில் முட்டிக்கொள்ளுவதுபோலவே முடிந்திருக்கும். ஏனெனில், கவு ன்சிலின் ஆயுளோ நெருங்கிவிட்டது. காங்கரஸ் கவர்ன்மெண்டோ தா மாக நினைத்ததற்கெல்லாம் தந்திமேல் தந்தி பறக்கவிடுகிறார்களேயொழிய

கவுன்சிலிலிருந்து போகும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் காலத்தை கடத்திக்கொண்டுபோய் குறைந்தது 15 நாட்களுக்குமுன் பதில் அனுப்புவதில்லை. அந்த அளவில் கடைசி தீர்மானத்திற்கு அவர்களுடைய பதில் வருவதற்கு முந்தியே கவுன்சிலின் காலமும் முடிந்துவிடும். அதற்குபின் இவ்வளவு நியாயமான இந்த கிளர்ச்சிக்கும் இடமிருந்திராது. இந்த பிரச்னையை இப்பொழுது தென்நாடு பூராவும், இந்தியாவிலுள்ள மற்றெல்லா மகாஜனங்களும் தெரிந்துகொண்டதுபோல் அப்பொழுது தெரிந்துகொண்டிருக்க முடியாது. இப்படி சுருக்கென்று அவர்கள் புத்தியில் படும்போல் செய்தாவது நியாயம் கிடைக்குமா என்று பார்ப்பதற்கு இது ஒன்றே கண்யமும், கௌரவமுமான மார்க்கமாயிருந்தது. அப்படியின்றி, இன்னம் கவுன்சிலுக்கு காலம் அதிகமிருந்திருக்கமாயின் இந்த சர்க்காரை திணரவைத்து, நியாயத்திற்கு பணியும்படி செய்திருப்போம், அல்லது இந்த கவுன்சிலை கலைத்துவிட்டு இப்பொழுது செய்த நியாய விரோதமான காரியத்தை அவர்களாக அவர்களுடைய தனீ பொறுப்பின்பேரிலேயே செய்தாகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். ஏனெனில், கவுன்சில் பக்கம் உள்ளது ஒவ்வொரு அம்சமும் மெத்த நியாயமானது, மறுக்கமுடியாத ஆதாரமுள்ளது. காங்கரஸ் சர்க்கார் பக்கமுள்ளதோ ஒவ்வொரு அம்சமும் நியாயமற்றது, ஆதாரமில்லாதது. வெறும் ஆள்பலம் கொண்டது.

(17) சேலம் மகாஜனங்களின் பொருளாதாரத்தையும், சுகாதாரத்தையும் நிரந்தரமாக பாதிக்கக்கூடிய இந்த முக்கியமான பிரச்னையை இவ்வளவு அழுத்த திருத்தமாக எடுத்துக்காட்டியும் அதற்காக பரிகாரம் தேடாமல், டிபுடி கலெக்டராயிருந்து தற்காலிக சேர்மென் பதவி வகித்துவரும் சர்க்கார் உத்தியோகஸ்தரைக்கொண்டு, அவசரம் அவசரமாக முன் கவுன்சிலார் செய்த தீர்மானத்தை யோசிப்பதற்கென்று 28-3-38-தேதியில் ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கு கூட்டி எவ்வளவோ முயன்றும் அதற்கு கோரமில்லாது அந்த மீட்டிங்கு நடைபெறுமல்போகவே, மறுபடியும் போதிய சாவகாசமில்லாமல், அதற்குமேல் அவசரமாக 31—3—38 தேதி இன்னமொருமுறை அதே ஸ்பெஷல் மீட்டிங்கை கூட்டி, அந்த கவுன்சிலுக்கு இன்னம் 3 மனி நேரம்தான் உயிரிருக்கிறதென்கிற சடைசி காலத்தில் 9—3—38-ல் செய்த தீர்மானத்தை ரத்துசெய்து, சர்க்கார் மானத்தைக் காப்பாற்றி அவர்கள் உத்தரவுபடி மைசூர்—பத்ராவதி டெண்டரையே ஒப்புக்கொள்ளுவது என்று ஒரு தீர்மானம் பாஸ் செய்து கொண்டார்களென்முல் இதன் நேர்மையையும், நியாயத்தையும் மகாஜனங்களே ஊகித்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறேன்:

இந்த ஸ்பெஷல் மீட்டங்குக்கும் ஆள் திரட்ட எல்லா உபாயங்களையும் கையாண்டு பட்டபாடு சேலம் மகாஜனங்கள் நன்கறிவார்கள். சென்னை சட்டசபைக்கும் கவுன்சிலுக்கும் சென்றிருந்த மெம்பர்கள் அவசரம் அவசரமாய் சேலம் வந்துசேரவும், பின்னுல் கவுன்சில் பதவிக்கு அடிகோல சென்னை சென்றவர்களும், சேலத்திலிருந்துகொண்டே அதை எதிர்பார்த்து வாக்குறுதிபெற்றவர்களும், வாக்குறுதி கிடைக்கலாம் என்று எதிர்நோக்கி இருந்தவர்களும் இப்படியுமாக எல்லோரும் கஷ்டப்பட்டும் கடைசியாக 17 மெம்பர்களே சேர்ந்தார்கள். ஸ்பெஷல் மீட்டிங்கின் கோரத்தி

ற்கோ 18 பேர்கள் வேண்டியிருந்தது. சர்க்கார் உத்தியோகஸ்தராகிய தற்காலீக சேர்மெனும் ஒரு மெம்பர் என்கிற எண்ணிக்கையை கூட்டிக் கொண்டமையால் தட்டுத்தடுமாறி கோரம் சேர்ந்து, 18 ஆகிவிட்டது. தீர்மானமும் பிறகு பாஸாய்விட்டது. இப்படியாக கதையும் முடிந்து, அடுத்த மணியே அவர்கள் கவுன்சில் ஆயுளும் முடிந்துவிட்டது.

சாதகமான டெண்டரைவிட்டு பாதகமான டெண்டரை சேலம் மகா ஜனங்களின்பேரில் சுமத்திய பாவத்திற்கும், பழிக்கும், ராஜிநாமா செய்து விலகிக்கொண்ட நானும், எனது சகோதர கவுன்சிலர்களும் ஆளாகாமல் போனோமென்பதும், நன்மை செய்யமுடியாவிடினும் தீமையாவது செய்ய மனம் துணியவில்லையென்பதுவும்தான் எங்களது ஆறுதல். அதுவே எங்கள் ராஜிநாமாவின் நோக்கம். இனி எங்களை தூற்றினாலும் சரி, போற்றினாலும் சரி, மனதார கடமையைச் செய்தவர்களுக்கு இரண்டும் ஒன்றே.

(18) இனி புள்ளி விவரங்களைப்பற்றியும், ஷை இரண்டு டெண்டர்களின் மற்ற முக்கிய அம்சங்களைப்பற்றியும் ஆராய்வோம்:—

(a) இந்தியன் ஹியூம் பைப் கம்பெனியின் டெண்டர் பிரகாரம் (1) குழாய்கள் சப்ளை செய்வது (2) குழாய்களுக்கு வால்வ்ஸ், பெண்ட்ஸ்கள் சப்ளை செய்து ஜாயிண்டு செய்வது, (3) குழாய்கள் போடுவது ஆகிய எல்லா வேலைகளுக்கும் சேர்ந்து ரூ. 4,34,699/

(b) மைசூர்—பத்ராவதியாரின் டெண்டர் பிரகாரம் குழாய்கள் சப்ளை செய்வது ஒன்றுக்கு மாத்திரம் ரூ. 4,53,356. இத்துடன் வால்வ்ஸ், பெண்ட்ஸ்கள் சப்ளைசெய்து ஜாயிண்டு செய்வது, குழாய்கள் போடுவது ஆகிய இந்த இரண்டு வேலைகளும் சேர்ந்து ரூ. 5,41,163/

(c) ஆகவே மொத்தமாய் எடுத்துப் பார்த்தால் மைசூர் பத்ராவதியாரின் ரேட், ஹியூம்பைப் கம்பெனியாரதை விட ரூ. 1,06,464/ ஒரு லக்ஷத்து ஆறாயிரத்து நானூற்று அறுபத்து நான்கு ரூபாய்) அதிகம்.

(d) ஆனால் இது இத்துடன் நிற்பதில்லை. மைசூர் — பத்ராவதியார் குழாய்களை போடுவது, குழாய்களை ஜாயிண்டு செய்வது இந்த வேலைகளை எடுத்துக்கொள்ளுவதில்லையாகையால், இவைகளை கேனன் டங்கர்லி என்கிற கம்பெனியாருக்கு கொடுக்கும்படி கவர்மெண்டார் சிபார்சுசெய்திருக்கிறார்கள். இந்த கம்பெனியார் "பிளான்ஜ்ட்" ஜாயிண்ட் என்கிற ஒரு விதமான ஜாயிண்டுக்கு கொடுத்திருக்கும்படியான ரேட்டைச் சேர்த்தே பத்ராவதியாரின் மொத்தம் ரூ. 5,41,163/ ஆயிற்று. ஆனால் அவர்கள் குழாய்கள் ஷை "பிளான்ஜ்ட்" ஜாயிண்டுக்கு தகுதியற்றவைகளாகையால் "ஸ்பிகாட் அண்ட் சாக்கெட்" ஜாயிண்ட் என்று சொல்லும்படியான அதாவது குழாய்க்குள் குழாயை நுழைத்து ஈயப்பத்துபோட்டு அடைக்கும்படியான ஜாயிண்டை செய்யவேண்டியிருக்கிறது. இதற்கு ஷை கேனன் டங்கர்லி ரேட் பிரகாரம் ரூ. 15,700/ அதிகம் ஏற்படுகிறது.

ஆகவே இதையும் சேர்த்து அதிகப்படியான ரேட் (ரூ. 1,06,464 + ரூ. 15,700/) ரூபாய் ஒரு லக்ஷத்து இருபதாயிரத்திற்கு மேலாகிறது.

(e) இத்துடனும் நிற்பதில்லை. குழாய்க்குள் குழாயை நுழைத்து ஈய பத்து ஜாயிண்டு செய்யப்படுவதால் தண்ணீர் வேகம் அதிகமாயிருக்கும் 10,800 அடி தூரத்திற்கு ஜாயிண்டுக்கும் கப்லிங்போட்டு,நட்டுகள் ஸ்குருக் கள் போட்டு முடுக்கவேண்டியிருக்கிறது. இதற்கு இன்னம் ரேட்டே நிர் ணயிக்கப்படவில்லை. இது எவ்வளவில் போய் நிற்குமோ என்று சொல்ல முடியாது. இந்த தொகையும் அதின்மேல் ஏறவேண்டியிருக்கிறது.

(f) இது மாத்திரமல்ல. குழாய்களை பைப்லேன் போடும்படியான இடத்திற்கு கொண்டுபோய் சேர்க்க சுமார் 5-மைல் தூரத்திற்கு ரோட் போடவேண்டியிருக்கிறது. இதற்கு ஹியூம் பைப் கம்பெனியார் ரூ. 10,000 என்று கணக்காய் நிர்ணயித்துவிட்டார்கள். கேனன் டங் கர்லி கம்பெனியாரோ அப்படி சொல்லாமல் இந்தரோட்டு போடுவதீற்கு என்ன சார்ஜ் உள்ளபடி ஏற்படுகிறதோ அதற்குமேல் நூற்றுக்கு சுமார் 10-வீதம் லாபம் சேர்த்து கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். ஆகையால் இதுவும் எவ்வளவாகும் என்பதை இப்பொழுது சொல்லமுடியாது. இந்த தொகையும் அதின்மேல் ஏறவேண்டியிருக் கிறது.

(g) இதோடு போகவில்லை. மைசூர்—பத்ராவதியாரின் கேஸ்ட் ஐய ர்ன் குழாய்கள் சாதாரணமாகவே வெகு பளுவானவை. தண்ணீர் வேகம் அதிகமாயுள்ள முதல் 10,800 அடிக்கு அவர்கள் முதலில் கொடுத்த குழாய்களின் மொத்தம் தாங்காதென்றும், குறைந்தது இன்னும் 300 டன் இரும்பாவது அதிகமாய்ச் சேர்த்து குழாய்களை மேற்கொண்டு மொத்தப் படுத்த வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள். குழாய்களை இப்படி வேண்டியஅளவு இவர்கள் மொத்தப்படுத்தி,கொண்டு வந்து தள்ளிவிடுவார்கள். பிறகு இவைகளை பைப் போடும் இடத்திற்கு கொண்டுபோய் சேர்ப்பதோ, யானைபோல் இந்த பளுவான பைப்புகளை எடுத்துப் போடுவதோ, குழாய்களைப் போடும் கண்டிராக்டர்களாகிய கேனன் டங்கர்லி கம்பெனியாரைச் சேர்ந்தது. இதை டெண்டர் கொடு த்த காலத்தில் அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை, இதற்கென்று ரேட் ஒன் றும் அவர்கள் இதுவரையிலும் கொடுக்கவுமில்லை. இதுவும் எவ்வளவாகு மென்று இப்பொழுது தெரியாது. ஆனால் இந்த தொகையும் அதின்மேல் ஏறவேண்டியிருக்கிறது.

(19) புள்ளிகள் கணக்குக்கு எட்டியவரையில் அதிகப்படியாக ரூபாய் ஒரு லக்ஷத்து இருபதாயிரத்திற்கு மேலிருக்க, இன்னும் மேலே (e) (f) (g) ல் குறிப்பிட்டுள்ளபடி கணக்குக்கு எட்டாத புள்ளிகள் எவ்வளவில் வந்து சேருமோ என்று நிர்ணயிக்க முடியாமலிருக்கிறது. எவ்வித தொல்

லேக்கும் இடமில்லாது, சுத்தமாய், கணக்காய், எல்லா விதத்திலும் சகாய மாயிருக்கக்கூடிய ஒரு கம்பெனியின் டெண்டரை விட்டுவிட்டு, வம்பை விலைக்கு வாங்குவதுபோல் மேலேசொல்லியபடி எல்லா ஊழல்களும் ஒருங்கே நிறைந்துள்ள மற்றொரு கம்பெனியின் டெண்டரை ஏற்றுக்கொள்ள புத்தியுள்ள, பொறுப்புள்ள யார்தான் சம்மதிக்கமுடியும்? அப்படியும் காங்கரஸ் கவர்ன்மெண்டார் சொல்லுவதுபோல் மைசூர்—பத்ராவதியாரின் டெண்டரை ஒப்புக்கொள்ளுவதென்றால் மேலே சொன்ன ஒவ்வொரு ஐடத்திற்கும் இவ்வளவுதான் தொகை என்பது தெரிந்துகொள்ளாமலும், அதை நிர்ணயிக்காமலும் எப்படி கண்டிராக்ட் ஒப்பந்தம் செய்துக்கொள்ள முடியும்?

(a) தக்க ஆதாரங்களுடனும், புள்ளிகள் விவரங்களுடனும் வித்தியாசம் ஒரு லக்ஷத்து இருபதாயிரத்திற்கு மேலேபோகிறதென்று புட்டுப்புட்டுக் காண்பிக்கும்பொழுது அதற்கு தக்க பதிலளிக்காமலும், சமாதானம் சொல்லாமலும், வித்தியாசம் "வெகு சொற்பம்தான்" என்று வாய்கூசாமல் மழுப்புவதை யார்தான்/ ஒப்புக்கொள்ளமுடியும்? இப்படி முதல் 7-மைல் தூரத்திற்கே சுமார் ஒன்றேகால்லக்ஷத்திற்குமேல் வரிபளுவு ஏற்படுமானால் மீதியிருக்கும் 20-மைல் தூரத்தை முடிப்பதற்குள் இது 5-லக்ஷத்திலல்லவா வந்து நிற்கும். இந்த கடனைக் கட்டவேண்டிய 20-வருடங்களில் இது வட்டியுடன் 10-லக்ஷத்திலல்லவா போய் முடியும். இதெல்லாம யார்தலையில் விடிவது.

(b) சானிடரி இஞ்சினியர் புள்ளி விவரங்களுடன் ஹியூம் பைப் கம்பெனி சிமெண்ட் பைப்கள் மேலானவை என்று ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியபொழுது காங்கரஸ் கவர்ன்மெண்டார் முதல் முதலாக 30-12-37-ல் அனுப்பிய உத்தரவில், மொட்டையாய் எவ்வித ஆதாரத்தையும், முகாந்தரத்தையும் காட்டாது, மைசூர்-பத்ராவதி டெண்டரை ஒப்புக்கொண்டோம் என்றார்கள்; பிறகு 4-2-38 ல் அனுப்பிய உத்தரவில் சீப் இஞ்சினியருடன் கலந்தாலோசித்து இந்த முடிவுக்கு வந்ததாக தெரிவித்தார்கள். அதின்பின் 2-3-38-ல் அனுப்பிய உத்தரவில் யாருடைய பெயருமில்லாமல் மொத்தமாக "நிபுணர்களின்" யோசனைப்படி என்று முடித்துவிட்டார்கள். அந்த நிபுணர் யார், அவருடைய அபிப்பிராயம் தான் என்ன, முந்தி சிமெண்ட் குழாய்களை ஆதரித்த சீப்இஞ்சினியர் இப்பொழுது அதற்கு மாறாக என்ன அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறார்என்பதை ரூபாய் 12-லக்ஷம் இந்த தண்ணீர் குழாய்களுக்காக கொடுக்கும் சேலம் மகாஜனங்கள் தெரிந்துக்கொள்ளவும் கூடாதா? இல்லையானால் இதை அந்தரங்கமாகவாவது சேலம் நகரசபையாருக்கு ஆதாரத்துடன் தெரிவிக்கக் கூடாதா?

(c) சாதாரண விஷயத்திற்கெல்லாம் கனம் பிரசுர இலாகா மந்திரியைக் கொண்டு கவர்ன்மெண்ட அறிக்கை வெளியிடும்பொழுது, ரூபாய் 24-லக்ஷம் கொண்ட இவ்வளவு முக்கியமான பிரச்னைக்கு, பிரசுரத்திற்கெ

ன்று தனியாய் ஒருவர் வீற்றிருக்கும்பொழுது, நகர சபையார் கிளப்பிய வெகு நியாயமான ஆக்ஷேபணைகளுக்கும், செய்த தீர்மானங்களுக்கும் இந்த காங்கிரஸ் கவர்ன்மெண்டாரிடம் தக்க ஆதாரங்களும் புள்ளிகளுமிருந்தால் ஏன் தைரியமாய் ஒரு கவர்ன்மெண்ட் அறிக்கை வெளியிடக்கூடாது? அப்படியுமில்லையானால், சேலம் நகரசபையில் கவுன்சிலர் களாகவும், மாஜி சேர்மென்களாகவும், சட்டசபை மெம்பர்களாகவுமுள்ள பிரதிநிதிகளைக் கொண்டாவது என்தக்க சமாதானம் சொல்லும்படி செய்யக்கூடாது. அவர்களுக்கு விவரம் தெரியாமல் இதை மூடிவைப்பானேன்?

(d) இவை இப்படியிருக்க, குறித்த ஒரு வேலைக்கு டெண்டர்களில் எது சகாயமாயும், சாதகமாயும் குறைந்த ரேட்டுள்ளதுமாயுமிருக்கின்றதோ அதையே தெரிந்தெடுக்கவேண்டியது எல்லா ஸ்தாபனங்களிலும் அனுசரிக்கப்பட்டு வரும் முறையும், கொள்கையுமாகும். அப்படியிருக்க டெண்டர்களை உடைத்து பரிசீலனை செய்தபின் குறித்த ஒரு கம்பெனியாருடன்—மைசூர்—பத்ராவதியாருடன்—பேரம் செய்வதும், அர்த்தமற்ற கியாரண்டி கேட்பதும் எப்படி ஒழுங்காகும். அந்த மாதிரி செய்யவேண்டிய அவசியமிருந்தால் எல்லோருக்கும் அதேபோல தக்க சந்தர்ப்பம் அளித்து அதின் பின்னல்லவா ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதைவிட்டு இப்படி முறையற்ற நியாயமில்லா காரியத்தை மிக்கபொறுப்பு வாய்ந்த மாகாண கவர்மெண்டே காங்கரஸ் மந்திரிகளைக் கொண்டு இப்படி செய்ய முன் வந்துவிட்டால் இதைவிட கேவலம் வேறு என்ன இருக்கிறது? பிறகு நீதி பரிபாலனம் செய்யும் கவர்ன்மெண்ட் என்பதற்கு மரியாதை எங்கே?

(20) இப்படி ஒரே பிடிவாதமாய், எதற்கும் பதில் சொல்ல வகையின்றி இதைமுடித்து விட்டபின் சென்னை சட்டசபையில் இந்த பிரச்னை வந்தபொழுது இதற்கெல்லாம் காரணஸ்தராயிருந்த சுகாதார மந்திரி கனம் டாக்டர் ராஜன் பின்வாங்கிக்கொள்ள அவருக்காக பிரதம மந்திரி கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் வக்காலத்து வாங்கிக்கொண்டு பதிலளித்தார். இது ஒரு முக்கியமான பிரச்னையாகையால் இதற்கு தாம் வெகு தெளிவாகவும், விரிவாகவும் பதில் சொல்லிவிடப் போவதாக ஆரம்பித்து கடைசியாக அவர் பேசியதைப்போல உப்புச்சப்பில்லாத பிரசங்கம் வேறு யாருமே செய்திருக்க முடியாது. இதுவரையில் இதைப்பற்றி கிளம்பியுள்ள ஒரு கேள்விக்காவது நேரான, சரியான பதில் கிடையாது. எல்லாம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் ஒரே மழுப்பல். அதை கீழே விவரமாய் எடுத்துக்காட்டுகிறேன்:—

(a) முதலில் இந்த பிரச்னையை இரண்டு விதமாக பிரித்துக்கொண்டார். (1) எந்தவிதமான குழாய்களை உபயோகிப்பது என்பது (2) யாருக்கு கன்டாரக்டை கொடுப்பது என்பது.

எந்தவிதமான குழாய்களை உபயோகிப்பது என்பதை நிர்ணயிக்கவும், அவர்கள் நிர்ணயிப்பதையே உபயோகப் படுத்தும்படி முனிசிபாலிட்டியை கட்டாயப் படுத்தவும் கவர்மெண்டாருக்கு பாத்தியம் உண்டு என்

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்



கிறார். இதையாரும் மறுக்கவில்லை. இந்த பாத்தியதையை அவர்கள் துஷ்பிரயோகப்படுத்துகிறார்களென்பது தான் முனிசிபாலிடியாரின் வாதம். சானிடரி இஞ்சினியர், சீப்இஞ்சினியர் இவர்களுடைய அபிப்பிராயப்படியும், 4-12-37 தேதிவரையில் இந்த காங்கிரஸ் கவர்ன்மெண்ட் அபிப்பிராயப்படியும் ஹியூம் ஸ்டீல்-சிமெண்ட் குழாய்களே சிலாக்கியமென்பது முனிசிபாலிடியார் நிரூபிப்பது. இதைவிட்டு, திடீரென்று கேஸ்ட் ஐயர்ன் தான் மேலென்று இதே காங்கரஸ் கவர்மெண்டார் முடிவுக்கு வந்ததற்கு ஆதாரம் எங்கே? "நிபுணர்களின் யோசனை"ப்படி என்று பெரிய பதத்தை உபயோகிக்கிறார். அந்த "நிபுணர்கள்" யார், அவர்களின் அபிப்பிராயம் என்ன என்றால், அது பரமரகசியமாம், சட்டசபையின் முன்கூட காட்டவோ, சொல்லவோ முடியாதாம். இதுதான் அவர் தெளிவுபடக் கூறுவதாம்.

இரண்டாவதாக 29-7-37 தேதிய நெ.2830 கவர்மெண்ட் உத்தரவுபடி டெண்டர்களை பைசல்செய்யும் பாத்தியம் முனிசிபாலிட்டியாருக்குத் தான் உண்டு என்று எடுத்துக்காட்டப்பட்டது இப்படி பாத்தியம் உண்டு என்பதை அவர் ஒத்துக்கொள்ளுகிறார். ஆனால் "மைசூர்—பத்ராவதி டெண்டரை ஒப்புக்கொண்டு, அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டது காங்கரஸ் கவர்ன்மெண்டாரா? முனிசிபாலிட்டியாரா? காங்கரஸ் கவர்மெண்டார். அப்படியானால், அந்த பாத்தியதைக்கு மரியாதை எங்கே? இதுபோக கவர்ன்மெண்டாரின் சிபார்சை மதிக்கவோ, மறுக்கவோ முனிசிபாலிட்டியாருக்கு சுதந்தரமுண்டு என்று சொல்லிவிட்டு அதே மூச்சில் அப்படி முனிசிபாலிட்டியார் மறுத்தால் பிறகு கிராண்டோ, கடனோ கொடுக்க முடியாதென்று சொல்ல கவர்மெண்டாருக்கும் அதிகாரமுண்டு என்று எச்சரிக்கிறார். இது என்ன ஊழமிரட்டல்? ஏற்கனவே காங்கரஸ் கவர்ன்மெண்டுக்கு முன்னிருந்த கவர்மெண்ட் இதற்கென்று சாங்ஷன் செய்த கிராண்டையும், கடனையும், முனிசிபாலிட்டியார் தக்க காரணங்களைக் காட்டி கேட்டும் கொடுக்க மறுத்தால் அவர் சொல்லுவது போல் அவ்வளவு எளிதில் அது முடிந்துவிடக் கூடியதல்லவென்பது அவருக்கு ஞாபகமிருக்கட்டும்.

(d) ஹியூம் ஸ்டீல் பைப்புகள் பரீக்ஷார்த்தமாம், பொதுப் பணத்தை கையாடும்பொழுது அப்படி பரீக்ஷார்த்தம் கூடாதாம், தொன்றுதொட்டு உறுதியாய் உபயோகத்தி லிருக்கும் கேஸ்ட் ஐயர்ன் பைப்புகளே சிலாக்கியமாம்.

அப்படியானால் இன்றைக்கு சுமார் 21-மைல் தூரத்திற்கு இதே ஹியூம் ஸ்டீல் பைப்புகளைக் கொண்டு ஆதோனி முனிசிபாலிட்டியில் தண்ணீர் குழாய்கள் போட்டுவருவது பரீக்ஷார்த்தமா? இன்றைக்கு திருப்பூர் முனிசிபாலிட்டியில் சுமார் 4-மைல் தூரத்திற்கும், ராஜமந்திரியில் சுமார் 3-மைல் தூரத்திற்கும், கரூர், பெஜவாடா இந்த ஊர்களில் சுமார் $2\frac{1}{2}$-மைல் தூரத்திற்கும் இதே ஹியூம் பைப்புகளைக் கொண்டு தண்ணீர் குழாய்கள் போட்டு வருவது பரீக்ஷார்த்தமா?

1937-வது வருடம் அக்டோபர் மாதம் நாகப்பூர் முனிசிபாலிட்டியில் தண்ணீர் குழாய்கள் போட இந்தியன் ஐயர்ன் அன்ட் ஸ்டீல் கம்பெ

னியாரால் (மைசூர்—பத்ராவதி யாருடையதைப் போன்ற) கேஸ்ட் ஐயர்ன் குழாய்களுக்கும், பிரஸ்தாப இந்தியன் ஹியூம் பைப் கம்பெனியாரால் ஸ்டீல் சிமெண்ட் குழாய்களுக்கும் டெண்டர் கொடுக்கப்பட்டது. இவை இரண்டில் எது சிலாக்கிய மென்பதை நிர்ணயிக்க நிபுணர்களடங்கிய ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்த கமிட்டியில் (1) மைசூர் கவர்ன்மெண்ட் மாஜி சீப் இஞ்சினியர் மிஸ்டர், ரங்கய்யா (2) மே. த. நைஜாம் கவர்ன்மெண்ட் சீப்இஞ்சினியர் நவாப் ஹாசன யார்ஜங் பகதூர் (3)மத்திய மாகாணம் எக்ஸிகியுடிவ் இஞ்சினியர் மிஸ்டர் மெக்கெல்வி ஆகிய இந்த மூன்று நிபுணர்களும் மெம்பர்களாயிருந்து ஹியூம்பைப் கம்பெனியின் சிமெண்ட் குழாய்களே சிலாக்கியமானவை என்று ஏகமனதாக முடிவுசெய்து, சுமார் 8½ லக்ஷம் ரூபாயிக்கு இந்த பைப்புகளைக் கொண்டே இன்றைக்கு வேலை நடந்து வருவது பரீக்ஷார்த்தமா?

ரங்கூன் தண்ணீர் சப்ளை ஸ்கீமுக்காக சர்.அலெக்ஸாண்டர் பென்னி அன்ட் கோ என்ற பெயர்போன இஞ்சினியர்களின் யோசனைப்படி இதே மாதிரி ஸ்டீல்—சிமெண்ட் குழாய்களைக் கொண்டு சுமார் 80 லக்ஷம் ரூபாய் செலவில் குழாய்கள் போட்டு வருவது பரீக்ஷார்த்தமா?

இந்த வேலைகளுக்கு உபயோகப் படுத்தப்படும் பணமெல்லாம் பொதுப்பணமல்லவா? இவைகளுக்கு யோசனை கூறிய இஞ்சினியர்களெல்லாம் நிபுணர்களல்லவா? தொன்றுதொட்டு ஒன்று உபயோகத்திலிருந்து வருகிறதென்கிற ஒரு காரணத்திற்காகவே அது சிலாக்கிய மென்று சொல்லி விடமுடியுமா? பழையன கழிதலும், புதியன புகுதலும் என்றபடி புதியன புகும்பொழுது பழையனவின் குறைகளை தெரிந்து அவைகளை நீக்கிவிடுவது இயற்கையல்லவா? பழையன என்று சொல்லப்படும் மைசூர்—பத்ராவதி கேஸ்ட் ஐயர்ன் குழாய்களில் தோஷங்களும், ஊழல்களும் நிறைந்துள்ளன என்று ஆதார பூர்வமாய் இடித்திடித்துக்காட்டியும் இவர்கள் மூளையில் ஏன் இது ஏறமாட்டேனென்கிறது?

(c) இந்த கம்பெனிக்கோ அல்லது அந்த கம்பெனிக்கோ எனவே, எதாவது குறித்த ஒரு கம்பெனிக்கு சகாயம் செய்யவேண்டு மென்கிற அக்கரை அங்கே யாருக்குமில்லை யென்றும், ஒரு கம்பெனியின் நிர்பந்தத்திற்காக எது நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டு அங்கீகரிக்கப் பட்டுள்ளதோ அதை விட்டு மற்றொன்றை அங்கீகரிப்பார்க ளென்று எதிர்பார்ப்பது தவறென்றும், கண்டிராக்டர்கள், டெண்டர்கள் என்கிற இந்த விஷயங்களில் முனிசிபல் கவுன்சிலர்களோ, கனம் சட்டசபை மெம்பர்களோ தலையிட்டுக் கொண்டால் அது விபரீதமாய் முடியுமென்றும், ஆகவே இதில் சிக்கிக் கொள்ளாது ஜாக்கிறதையாயிருக்கும்படியும் எச்சரிக்கின்றார்.

நல்லவேளையாக நாமாக அப்படி ஒன்றும் சொல்லாமல் அவருக்கே மேற்சொன்ன சந்தேகங்கள் மனதில்பட்டு அவராகவே அவைகளுக்கு சமாதானம் சொல்ல முன்வந்துவிட்டார். முனிசிபல் அங்கத்தினர்களுக்கோ, அல்லது கனம் சட்டசபை மெம்பர்களுக்கோ அந்த மாதிரி எண்ணங்

கள் கற்பிக்க எள்ளளவு மிடமில்லை யென்பதற்கு மேலே காட்டியுள்ள ஆதாரங்களும், முகாந்திரங்களும் போதிய சான்றாகும். அவைகளையெல்லாம் ஒரே போக்காய் புறக்கணித்துவிட்டு எந்த நியாயத்திற்கும் செவிசாய்க்காது முரட்டுப் பிடிவாதம் காட்டி நடந்துகொள்ளும் காங்கரஸ் கவர்மெண்டாரின் நடவடிக்கைதான் மேற்சொன்ன ஒவ்வொரு சந்தேகத்திற்கும் தாராளமாய் இடந்தருவது போலிருக்கிறது.

ஆகவே இந்த எச்சரிக்கையை வாப்ஸ் வாங்கிக்கொண்டு எங்கே சந்தேகத்திற்கு இடமிருக்கிறதென்று அவருடைய ஞானக் கண்ணுக்கு தெரிகிறதோ அங்கே அந்த அழுக்கைப் போக்கட்டும். அது சுலபம். தர்க்கம் வேண்டாம். எவ்வளவு சாமர்த்தியமான தர்க்கமும் உண்மைக்கு முன் நிற்காது என்பதை அவர் இப்பொழுதாவது தெரிந்துகொள்ளட்டும். தர்க்கத்தால் மிரண்டு ஏமாந்துபோகும் காலம் மலையேறிவிட்டது.

(d) சேலம் மண் ஒரு போக்கானதாம். அதில் சிமென்ட் குழாய்கள் சரியாயிருக்குமா என்று நம்பமுடியாதாம். இதை இவர் முப்பது வருடங்களுக்குமுன் சேலம் முனிசிபாலிடியில் சம்மந்தம் வைத்துக்கொண்டிருந்தபொழுது தெரிந்து கொண்டாராம். ஆகவே சிமென்ட் குழாய்களைவிட கேஸ்ட் ஐயர்ன் குழாய்கள் மேலானவை என முடிவு செய்யப்பட்டதாம்.

முதலில் மேட்டூர் தண்ணீர் சிமென்ட் குழாய்களுக்கு ஒத்துப் போகாது என்று ஒரு ஆதாரமற்ற வதந்தி கிளம்பப்பட்டது. அது பொய், மேட்டூர் தண்ணீர் சிமென்ட் குழாய்களுக்கு எல்லா விதத்திலும் ஒத்துப் போகக் கூடியது என்று ரசாயன சாஸ்திரி மிஸ்டர் மிச்செல் என்பவரைக் கொண்டு ஹியூம் பைப் கம்பெனியார் நிரூபித்துவிட்டார்கள். ஆகவே அதை விட்டு இவர் மண்ணுக்கு வந்துவிட்டார். அப்படியும் வைத்துக்கொண்டாலும், இவர் வாயளவில் சேலம் மண்ணுக்கும் சிமென்ட் குழாய்க்கும் ஒத்துப் போகாது என்று சொல்லிவிட்ட மாத்திரத்திலேயே அதுவேதவாக்கியமாய் விடுமா? எந்த ஆதாரத்தைக் கொண்டு இப்படி சொல்லுகிறார்? எந்த நிபுணர் இதை நிரூபித்துக் காட்டினார்? முப்பது வருடங்களுக்கு முன் எப்பேர்ப்பட்ட சிமென்ட் குழாய்கள் உபயோகிக்கப்பட்டன? அவை யாரால் எந்த முறைப்படி தயாரிக்கப்பட்டவை? அவை சரியானவை என்று வைத்துக் கொண்டாலும் சேலம் முனிசிபல் எல்லைக்குள் உள்ள மண்ணைப் பற்றியல்லவா இவரது அனுபவம் இருந்திருக்கவேண்டும். இப்பொழுது பிரஸ்தாபத்திலிருப்பது சேலம் மண் அல்லவே, மேட்டூர் மண்ணல்லவா? அப்படியிருக்க இந்த வீண் வாதம் எதற்கு ?

(e) காங்கரஸ் கவர்ன்மெண்டார் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கும் மைசூர்—பத்ராவதியின் டெண்டர் மெத்த சிறந்ததாம். ஒப்பந்தங்களோ அதைவிட சிறந்ததாம். விலையின் வித்தியாசமோ ஒன்றுமில்லை. (The deference in cost was trifling) என்று சொல்லக் கூடிய அவ்வளவு சொற்பமாம். இதைக் கேட்பவர்கள் சிரிக்கத்தான் வேண்டும், இது எப்படி சிறந்தது? எதற்கும் ஆதாரம் வேண்டாமா? எல்லாம் வெறும்வார்த்தைகள் தானா ? ஏற்கனவே, அதிக பளுவான குழாய்களுக்கு இன்னம்

அதிக பளுவை ஏற்றி யாரோ, எப்படியோ அவதிப்படட்டும் என்று குழாய்களைக் கொண்டு வந்து தள்ளிவிட்டுப் போவதில் சிறந்ததா? குழாய்களை சப்ளை செய்வது ஒரு கம்பெனி, வால்வ்கள், பெண்டுகள் சப்ளைசெய்வது ஒரு கம்பெனி, அவைகளை ஜாயிண்ட் செய்து குழாய்கள் போடுவது ஒரு கம்பெனி இப்படி, மூன்று பெயர்கள் சேர்ந்து ஒரு தோலைக் கெடுத்தார்கள், என்னும் பழமொழிபோல், தடுமாறும்படி டெண்டர் கொடுத்திருப்பதில் சிறந்ததா? குழாய்களுக்கே ஒன்றுக்கு இரண்டாய் ரேட்டை கொடுத்து விட்டு மற்ற முக்கியமான இரண்டு வேலைகளுக்கும் யாரிடம், எவ்வளவுக்கு கண்டிராக்ட் செய்து கொள்ளுவது என்பதை நிர்ணயிக்க முடியாத ஒரு நிலைமையை முனிசிபாலிட்டிக்கும், கவர்ன்மெண்டுக்கும் ஏற்படுத்தியிருப்பதில் சிறந்ததா? நாளடைவில் உள்ளுக்கும், மேலுக்கும் துருப்பிடித்துப் போய் சேலம் மகாஜனங்கள் நஷ்டப்பட்டு கஷ்டப்படும் படியான குழாய்களை சப்ளை செய்வதில் சிறந்ததா? இப்படி எந்த வகையில் டெண்டரோ, ஒப்பந்தமோ சிறந்தது என்பது அவருடைய புத்திக்குத் தான் எட்டவேண்டும்.

இதுபோக, விலையின் வித்தியாசத்தைப் பற்றிகூட வாய் கூசாமல், விஷயம் தெரியாத, பொறுப்பில்லாத ஒருவர் சொல்லுவது போல் இவர் சொல்லத் துணிந்துவிட்டது தான் வியப்பைத் தருகிறது. 18-வது பாராவிலும் 19 (a)யிலும் புள்ளிகளுடன் நஷ்டம் மொத்தத்தில் 10 லக்ஷத்திற்கு வந்துசேரும் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதை சும்மா தர்க்கத்திற்காக வென்று பாதியாக குறைத்து வைத்துக் கொண்டாலும் 5 லக்ஷம் ஆகிறதே. சேலம் நகரின் ஜனத்தொகை சுமார் ஒரு லக்ஷத்திற்கு மேலாகும். மேற் சொன்னபடி நஷ்டம் குறைந்தது 5 லக்ஷம் என்று வைத்துக் கொண்டாலும், இது நபர் ஒன்றுக்கு சராசரி ரூ 5 வீதம் சேலம் மகா ஜனங்களின் பேரில் அனுவசியமாய் பாரம் ஏறிவிடவில்லையா? அப்படி புள்ளிகளுடன் எடுத்துக்காட்டியிருப்பதற்கு பதில் சொல்லுவதானால் புள்ளிகளுடனல்லவா இந்த விதத்தில் "சொற்பம்" என்று எடுத்துக்காட்டவேண்டும். ஒருவேளை, 5 லக்ஷம் அவருக்கு "வெகு சொற்பமாய்" காணலாம். இது ஏழை வரிகொடுப்போருக்கு மிகமிகப் பெரிய நஷ்டமாகும். இந்த நஷ்டத்தில் 1 பைசா நஷ்டத்தை கூட ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லாத வகையிருக்க அதைவிட்டு ஏன் இந்த வம்பும் வீண் தர்க்கமும்? இவ்வளவு தூரம் எடுத்துக் காட்டியும், எல்லா நஷ்டத்துடனும் மைசூர்—பத்ராவதி யாருக்கே கொடுத்தாக வேண்டுமென்கிற விருப்பம் கனம் மந்திரிமார்களுக்கிருக்குமாயின் இதை மாகாண பொதுப் பண்டிவிருந்தே காருண்ய காங்கரஸ் கவர்ன்மெண்டார் கொடுத்து விடட்டுமே. அதை விட்டு சேலம் மகாஜனங்களின் தலைமேல் ஏன் இதை சுமத்த வேண்டும்?

(*f*) சென்ற சுமார் 10 வருடங்களாக இருந்துவந்த இந்த பிரச்னைக்கு சானிடரி இஞ்சினியரின் சிபார்சுடன் டெண்டர்கள் கிடைத்த 8 நாட்களுக்குள், 30-12-'37 தேதியில், கிறிஸ்மஸ் விடுமுறை தினத்தில், மைசூர் பத்ராவதி டெண்டரை ஒப்புக்கொள்ளும்படி ஏன் தந்தி கொடுக்கப்பட்டது என்று கேட்டதற்கு, அது உண்மையை அரைகுறையாய் தெரிந்துகொண்டதினால் வந்த கேள்வியென்றும், பத்ராவதியார் முதல் பத்தாயிரம் அடி தூரத்திற்கு "வெகு நல்ல ஒப்பந்தம்" கொடுத்திருந்ததாகவும் அது 31-12-37 தேதி வரையில்தான் நிற்குமென்றும், ஆகவே அந்தத்தேதிக்குள்ளாகவே அதை ஒத்துக்கொண்டாகவேண்டி நேர்ந்ததென்றும் சொல்லுகிறார்.

இது ஒரு விந்தையான பதிலே. அவர் சொல்லுவது போலவே 31-12-37 தேதிக்குப்பின் இந்த அபூர்வமான, "நல்ல ஒப்பந்தம்" கிடைக்காமல் போய்விடுமென்றே வைத்துக்கொள்ளுவோம். தலைக்கு தொப்பியா, தொப்பிக்கு தலையா? 24 லக்ஷம் செலவு செய்யவேண்டிய, 10 வருடம் கஷ்டத்திலிருந்த, இவ்வளவு பெரிய திட்டம் அமுலுக்கு வரும்பொழுது எவ்வளவு அரிய பெரிய விஷயங்களை ஆற அமர யோசிக்கவேண்டும். அதைவிட்டு ஏதோ, கேவலம் குறித்த ஒரு கம்பெனியின் ரேட்டோ, ஒப்பந்தமோ சற்று முன் பின்னாய் போகப்போகிறது என்பதற்காக இந்த திட்டத்திற்கே அடிப்படையான எல்லா முக்கிய அம்சங்களையும் நிதானித்து, சர்வ ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதைவிட்டு, தலைகால் தெரியாது, விடுமுறை நாளில் ஆபீஸை திறந்துவைத்துக்கொண்டு, தந்தியில் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி கட்டளையிடுவதுதானா ஒரு பொறுப்புவாய்ந்த மாகாண சர்க்காரின் வேலை. அந்த தந்தி ஆர்டர் பிரகாரமே ஒப்பந்தம் செய்து முடித்திருந்தால் பிறகு இது எவ்வளவு கேவலமாயும், நகைப்புக்கிடமாயும் முடிந்திருக்கும். அதுவுமன்றி, அவர்களுடைய நிபந்தனைப்பிரகாரமே முதல் பத்தாயிரம் அடி தூரத்திற்கு அதிகமாய் பணம் கொடுக்க நேர்ந்திருந்தாலும் இதென்ன மூவாயிரம், அல்லது நான்காயிரம் ரூபாய்க்கு மேலா போயிருக்கும். 24 லக்ஷம் ரூபாய் செலவு செய்யும்பொழுது இந்த சிறிய தொகை எம்மாத்திரம். இதற்காகவா இப்படி தடுமாறவேண்டும்.

மேலும் இந்தியாவில் கேஸ்ட் ஐயர்ன் குழாய்களை தயார் செய்வது மைசூர்-பத்ராவதி கம்பெனி ஒன்றுதானா? இதைவிட்டால் வேறு புகலிடமில்லையா? அப்படியும் அவர்களின் ரேட்தான் ஏதாவது சகாயமானதா? மேலே பாரா 20 (*e*)ல் காட்டியுள்ளபடி நாகப்பூர் முனிசிபாலிட்டிக்கு இந்தியன் ஐயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனியார், மைசூர்-பத்ராவதியாருடையதைப் போன்ற கேஸ்ட் ஐயர்ன் குழாய்களுக்கு கொடுத்துள்ள டெண்டரில் ஒரு அந்தர் வெயிட்டுக்கு ரூ. 5 வீதம் ரேட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சேலம்-மேட்டூர் திட்டத்திற்கு மைசூர்-பத்ராவதியார் கொடுத்திருக்கும் கேஸ்ட் ஐயர்ன் குழாய்களுக்கோ ஒரு அந்தர் வெயிட்டுக்கு ரூ. 8-8-0 வீதம் ரேட் கொடுத்திருக்கிறார்கள். இதன்படி அந்தர் வெயிட்டு ஒன்றுக்கு வித்தியாசம் ரூ. 3-8-0 வீதம் இவர்கள் சப்ளை செய்யப்போகும் ரூ. 4,53,356

மதிப்புள்ள குழாய்களுக்கு ரேட்டில் அதிகப்படியாய் ஏற்படுவது ரூ. 1,86,000. (ரூபாய் ஒரு லக்ஷத்து என்பத்தாறாயிரம்) இதுதானு எங்கும் கிடைக்கக்கூடாத சகாயமான ரேட்? இதுதானு சேலம் மகா ஜனங்களுக்காக தண்ணீர் சப்ளை செய்யும் திட்டத்திற்கு கனம் பிரதம மந்திரி C. ராஜகோபாலாச்சாரியார் மெத்த அக்கரைகொண்டு பொதுப்பணத்தை வெகு சிக்கனமாய் செலவு செய்யப்பாடுபடுவதாக சொல்லிக்கொள்ளுவதற்கு அடையாளம்? இதை யெல்லாம் பார்த்தாலே மனம் பதாவில்லையா?

முடிவுரை:—சேலம்-மேட்டூர் தண்ணீர் சப்ளைககாக டெண்டர்கள் பைசல் செய்வதைப்பற்றிய விவரங்களெல்லாவற்றையும் கூடியவரையில் சுருக்கமாய் மேலே எடுத்து சொல்லிவிட்டேன். இதை ஊன்றிப்படிப்பவர்கள் எல்லோருக்கும் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் பக்கம் நியாயமிருக்கிறதா அல்லது நகர சபையாரின் பக்கம் நியாயமிருக்கிறதாவென்பது தெள்ளென விளங்கும். தவறு செய்வது மனித சுபாவம். ஆனுல் தவறு நிகழ்ந்த பின் அதை எடுத்துக்காட்டும்பொழுது திருந்துவது மெத்த பெருந்தன்மையுடையதாகும். மகாத்மா காந்தியடிகள் கூட தாம் இமயகிரியைப்போன்ற தவறு செய்துவிட்டதாக சொல்லி வருந்தி திருந்தியதை நாம் கேட்டிருக்கிரும். ஆகவே நடந்துபோன விஷயத்தில் உள்ள குறைகளை இப்பொழுதாவது, சேலம் மகா ஜனங்களின் நன்மையைக்கருதி, நிவர்த்திப்பதற்காக வேண்டி முன் செய்த முடிவை புனராலோசனை செய்யும்படி காங்கரஸ் கவர்ன்மெண்டாரை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகர சபையார் செய்த தீர்மானத்திலும்கூட இந்தியன் ஹியூம் பைப் கம்பெனி—சிமெண்ட் குழாய்களுக்கே கண்டிராக்ட் கொடுத்தாக வேண்டுமென்று வற்புறுத்தப்படவில்லை. அவை எல்லா விஷயத்திலும் எவ்வித குற்றங்குறைகளுக்கும் இடமின்றியிருப்பதாலும், மெத்த மேலானவை, திடமானவை என்று இஞ்சினியரிங் அனுபவம் வாய்ந்த எல்லா மேதாவிகளாலும் அங்கீகரிக்கப்படுகிறமையாலும், விலை விஷயத்திலும் லக்ஷக்கணக்கில் சகாயமாயிருப்பதாலும் அவர்களுடைய டெண்டரை ஏற்றுக்கொள்ளுவது வெகு உசிதமானது என்று தெரிவித்துக்கொண்டார்கள். அப்படியின்றி, மைசூர்-பத்ராவதியாருக்கே கொடுத்தாகவேண்டுமென்ற பிடிவாதம் கனம் மந்திரிமார்களுக்கு இருக்குமானுல், இதேபோன்ற கேஸ்ட் ஐயர்ன் குழாய்களுக்கு மற்ற இடங்களில் கொடுத்துள்ளபடி அந்தர் வெயிட் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் நியாயமாயுள்ள ரேட்டுக்கு முடித்து, குழாய்கள் போடுவது, ஜாயின்ட் செய்வது முதலிய எல்லா வேலைகளையும் அவர்களே ஏற்றுக்கொள்ளும்படி செய்து, தண்ணீர் சப்ளையாகவேண்டிய அளவு, அதாவது டிஸ்சார்ஜிங் கெபாசிடிக்கு (discharging capacity) 25 வருடங்களுக்கு காரண்டி வாங்கிக்கொண்டு அவர்களுக்கு கொடுத்துவிடலாமென்றும் தெரிவித்திருக்கிருர்கள். ஆகவே வெகு நியாயமான அந்த ஒப்பந்தம்செய்து கொள்ளுவதற்கு எவ்வித ஆக்ஷேபணையுமிருக்க இடமில்லை. காரண்டியில் இந்த நிபந்தனையிருக்கவேண்டியது வெகு அவசியமானது. ஏனென்ருல்

கேஸ்ட் ஐயர்ன் குழாய்கள் நாளடைவில் உள்ளுக்கும் மேலுக்கும் துருப் பிடித்து, உள் சுற்றளவு குறைந்து, அதின் காரணமாக தண்ணீர் சப்ளை யாகவேண்டிய அளவும் (அதாவது discharging capacity) குறைந்துவிடு கிறதென்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை.

பனமரத்துப்பட்டி ஏரியிலிருந்து கோரக குழாய்களில் கிராவி டேஷனல் (by gravitation) தண்ணீர் வருவது போலிருந்தால் பாதக மில்லை. மேட்டூர் தண்ணீர் சப்ளை அப்படியல்ல. அதை மேலே பம்பு செய்தே குழாயில் கொண்டுவரவேண்டும். ஆகவே குழாய்களின் உள் சுற்றளவு குறைந்து, தண்ணீர் சப்ளையாகவேண்டிய சார்ஜ் (pumping cost) நிரந்தரமாக வருடாவருடம் அதிகரித்துக்கொண்டு போய்விடும். அது சேலம் மகா ஜனங்களை ஜன்ம ஜன்மத்திற்கும் பாதிக்கும். இதைப்பற்றியும், கேஸ்ட் ஐயர்ன் குழாய்களிலுள்ள மற்ற ஊழல்களைப்பற்றியும், இங்கிலாந்தில் பர்மிங்காம், வாடர் (தண்ணீர்) டிபார்ட்மெண்ட் சீப் இஞ்சினியர் மிஸ்டர் F. W. மக்காலே என்னும் நிபுணர் சென்னை இந்து பத்திரிகையில் 11-12-37 தேதியில், வெகு தெளிவுபட எழுதியிருக்கிறார். அவர் அனுபவத்தில் பார்த்த அளவில் நல்ல மண்ணும், நல்ல தண்ணீரும் பாயும் ஒன்றிரண்டு பாகங்களில் இவை நன்றாயிருப்பது போக மற்ற இடங்களிலெல்லாம் கேஸ்ட் ஐயர்ன் குழாய்கள் 100க்கு 90 வீதத்திற்குமேல் வெகு மோசமாயிருப்பதாக எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த காரணம்பற்றியே இப்பொழுது கேஸ்ட் ஐயர்ன் குழாய்களுக்குகூட சிமெண்ட் கவரிங் கொடுத்து உபயோகப்படுத்தி வருகிறார்களென்றும், அப்படி சிமெண்ட் கவரிங் கொடுக்கப்பட்டவை திருப்திகரமாயிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இதுபோன்ற ஆதாரங் கள் ஹியூம் பைப்பைப்போன்ற சிமெண்ட் குழாய்களின் சிலாக்கியத்தைப் பற்றி ஐயமறக்காட்டுகின்றன. இது நிற்க, நான் விசாரித்துத்தெரிந்துக் கொண்டவரையில் இந்தியாவில் எங்கேயாவது இதுவரையில் தண்ணீர் வேகம் அதிகமாயுள்ள பாகத்தில் ஸ்டீல் குழாய்கள் போக கேஸ்ட் ஐயர்ன் குழாய்கள் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு உதாரணமாவது கிடைக் கவில்லை. மைசூருக்கு பக்கத்திலுள்ள பெங்களூர் வாடர் ஒர்க்ஸிலும்கூட அப்படியில்லையாம். மேட்டூர் ஒன்றுதான் முதன் முதலாக இந்த அபூர்வ பரீக்ஷையில் இறங்கி இருக்கிறது. முடிவு என்ன கதியாகுமோ அறியோம்.

ஆகவே நானும், எனது சகோதர கவுன்சிலர்களும் சேலம் மகா ஜனங்களின் நன்மையை சிரமேற்கொண்டு மனதார எங்களது கடமையை எங்கள் சக்திக்கெட்டிய அளவு நிறைவேற்றிவிட்டு மேற்கொண்டு ஒன்றும் செய்ய வகையில்லாதபொழுது வெளியேறிவிட்டோம். இனி அந்த நகர சபையில் அங்கம் வகிக்கப்போகும் சகோதரர்கள் மேற்கூறியுள்ள சாதக பாத கங்களை ஆராய்ந்து ஆலோசித்து எந்தவிதம் இந்த டெண்டர்களை முடித்து, கண்டிராக்ட் ஒப்பந்தம் செய்துகொள்ளுவது சேலம் மகா ஜனங்களுக்கு நிரந் தரமான நன்மை பயக்குமோ அந்த முறையில் முடிக்க தங்களாலியன்ற எல்லா முயற்சிகளையும், மூழுமனதுடன் செய்யும்படி கைகூப்பி வேண்டிக்

கொள்ளுகிறேன். இது கக்ஷி பிரச்னையல்ல. தேசிய, ராஜீய போராட்ட விஷயமல்ல. சேலம் மகா ஜனங்களின் பொருளாதாரத்தையும், சுகாதாரத்தையும் என்றென்றைக்கும் பாதிக்கும்படியான வெகு முக்கியமான பிரச்னை. எனவே இதில் எல்லோரும் தங்களது முழு கவனத்தையும் செலுத்தவேண்டுமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

சேலம்,<br>19—4—1938.

தங்கள் ஊழியன்,<br>**ஜி. ராமச்சந்திர நாயுடு.**

Printed at The Raju Press, Salem.—1938.